# தேச பக்தி
DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 097 ★ 08.08.2026 ★தமிழ் நாளிதழ் ★சனிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:097 ★08.08.2026 ★TamilDaily ★Saturday ★Page-4 ★Price-₹5/- Chennai



**தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


## காலநடை மருத்துவப் படிப்புகளுக்கு

# நுழைவுத்தேர்வை அறிமுகப்படுத்த முதல்வர் விஜய் எதிர்ப்பு




கால்நடை மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கையை நுழைவுத் தேர்வின் அடிப்படையில் நடத்தாமல், மேல்நிலைப் பள்ளி தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையிலேயே நடத்த வேண்டும் என வலியுறுத்தி பிரதமர் மோடிக்கு, முதல்வர் விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தின் விவரம்: கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் கால்நடை பராமரிப்பு (BVSc & AH) பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கை தொடர்பான மிக முக்கியமான பொருண்மையை உங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

இந்திய கால்நடை மருத்துவ கவுன்சில் சட்டம், 1984ன் விதிமுறைகளின்படி, அனைத்து கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலும் கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் கால்நடை பராமரிப்பு பட்டப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கையானது, பொது நுழைவுத் தேர்வின் (Common Entrance Examination) அடிப்படையில் மையப்படுத்தப்பட்ட கலந்தாய்வு முறை (Centralized Counselling Process) மூலம் இடங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என இந்திய கால்நடை மருத்துவ கவுன்சில் பரிந்துரைத்துள்ளது.

அதற்கு மாற்று ஏற்பாடாக, மேற்படி 202627 கல்வியாண்டு முதல் தனியாக நுழைவுத் தேர்வு நடத்த முடியாத பட்சத்தில், நீட் (NEET UG2026) தேர்வின் தரவரிசைப் பட்டியலின் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெறவேண்டும் என இந்திய கால்நடை மருத்துவ கவுன்சில், மாநிலங்களுக்கு அறிவுறுத்தியிருப்பது எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலும், இந்த முன்மொழிவு, தமிழகத்துக்கு பல்வேறு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும். கால்நடை மருத்துவக் கல்வியானது தமிழகத்தின் வளர்ச்சிக்கான முன்னுரிமைகளில் ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

கால்நடை மருத்துவக் கல்வி என்பது வெறும் தொழில்சார் படிப்பு மட்டுமல்ல, மாறாக, மாநிலத்தின் கால்நடை பராமரிப்பை வலுப்படுத்துவதற்கும், கால்நடைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும், பால்வள மேம்பாட்டினை வலுப்படுத்துவதற்கும், லட்சக்கணக்கான கிராமப்புறக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்குமான நமது முயற்சிகளின் அடித்தளமாகும்.

இன்று கால்நடை மருத்துவக்கல்வியில்சேர்க்கை பெறும் மாணவர்களே, வரும் ஆண்டுகளில் நமதுவிவசாயிகளுக்கும், கிராமங்கள் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறைக்கும் சேவை செய்யும் கால்நடை மருத்துவர்களாகவும் உருவெடுக்கிறார்கள்.

தமிழகம், மேல்நிலைப் பள்ளித் தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையிலேயே தொழிற் கல்விப் படிப்புகளுக்கான சேர்க்கை முறையை பல தசாப்தங்களாக பின்பற்றி வருகிறது. இந்த முறையானது (Model), திறமையான தொழில் முறை வல்லுநர்களைத் தொடர்ந்து உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், கிராமப்புறங்கள், அரசுப் பள்ளிகள், பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர் மற்றும் சமூகரீதியாகப் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த தகுதியான மாணவர்களுக்கு, உயர்கல்வியைப் பெறுவதற்கான நியாயமான வாய்ப்பை உறுதி செய்துள்ளது.

இத்தேர்வு முறை, சமூக நீதி, பிராந்திய சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான ஒரு பயனுள்ள கருவியாகச் செயல்பட்டுள்ளது.

20072008 ஆம் கல்வியாண்டு முதல், தமிழக அரசு, தொழிற்கல்விப் படிப்புகளுக்கான பொது நுழைவுத் ।தேர்வை ரத்து செய்துள்ளது என்றும், குறிப்பாக கிராமப்புற மற்றும் பின்தங்கிய பின்னணியைக் கொண்ட பல திறமையான மாணவர்களுக்கு நுழைவு நிலையில் பெரும் தடைகளை நீட் (NEET) உள்ளிட்ட ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வுகள் ஏற்படுத்துகின்றன என்பதை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

தேசியத் தேர்வுகள் முகமை (NTA), நீட் தேர்வுகளை நடத்துவதில் பல்வேறு சிக்கல்களைச் சந்தித்து வருவதையும், அண்மையில் சில முறைகேடுகள் காரணமாக, தேர்வை ரத்து செய்துவிட்டு, மறுதேர்வு நடத்த வேண்டிய கட்டாயத்திற்கு மேற்படி முகமை ஆளானநிலையில், 2024 ஆம் ஆண்டில் வினாத்தாள் கசிந்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் மத்திய புலனாய்வுத் துறையின் விசாரணைக்கும் வழிவகுத்தன என்பதையும் கருத்தில் கொண்டு, கால்நடை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைக்கு நீட் தேர்வை அறிமுகப்படுத்துவது பொருத்தமானதாக இருக்காது.

பள்ளிப் படிப்பின் மூலம் வெளிப்படும் தகுதியை பிரதிபலிப்ப தற்குப் பதிலாக, சிறப்புப் பயிற்சிக்கான வாய்ப்புகள், நிதி ஆதாரங்கள் மற்றும் பலமுறை தேர்வு எழுதுவதற்கான வாய்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இதுபோன்ற நுழைவுத் தேர்வுகளில் பெறப்படும் வெற்றி தீர்மானிக்கப்படுகிறது என்ற எண்ணத்தை சமீபத்திய ஆண்டுகளின் அனுபவங்கள் மேலும் உறுதிப்படுத்தியுள்ளன.

த்தகைய நடைமுறையைக் கால்நடை மருத்துவக் கல்விச் சேர்க்கைக்கும் விரிவுபடுத்துவது என்பது,।அதைப்போன்ற பாதிப்புகளையே ஏற்படுத்தும்.

மேலும், கால்நடை மருத்துவக் கல்வியானது ஒவ்வொரு மாநிலத்தின் வேளாண் மற்றும் கிராமப்புறப் பொருளாதாரத்துடன் இயல்பாகப் பிணைக்கப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவ வல்லுநர்களுக்கான தேவை, இத்துறையில் சேரும் மாணவர்களின் பின்புலம் மற்றும் கால்நடைத் துறையின் வளர்ச்சிக்கானமுன்னுரிமைகள் ஆகியவை நாடு முழுவதும், மாநிலத்திற்கு மாநிலம் கணிசமாக மாறுபடுகின்றன. இந்தச்சூழலில், கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் கால்நடை பராமரிப்பு பட்டப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கை அளவுகோல்களைத் தீர்மானிக்கும் உரிமையை அந்தந்த மாநில அரசுகளிடமே விட்டுவிடுவதுதான் சரியானதாக இருக்கும். இத்தகைய அணுகுமுறையே, நமது கூட்டாட்சி அமைப்பை மதிப்பதாக அமைவதோடு, கல்வித் தரத்தைத் தொடர்ந்து உயர்த்தவும், தகுதியான கால்நடை மருத்துவர்கள் உருவாவதை உறுதிசெய்யவும் உதவும்.

அதே வேளையில், மாநிலங்கள் தங்களது சமூக பொருளாதார நிலைகளுக்கும் கல்வி அமைப்புகளுக்கும் ஏற்புடைய மாணவர் சேர்க்கைக் கொள்கைகளை உருவாக்கிக் கொள்ளவும் இது வழிவகுக்கும். எனவே, இப்பொருண்மை குறித்து பிரதமர் தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டும். இந்திய கால்நடை மருத்துவ கவுன்சில் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய அறிவுறுத்த வேண்டும்.

மேல்நிலைப் பள்ளித் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் கால்நடை பராமரிப்பு பட்டப்படிப்பிற்கான சேர்க்கையைத் தொடரவோ அல்லது மாணவர் சேர்க்கை அளவுகோல்களை அந்தந்த மாநில அரசுகளே தீர்மானிக்கவோ அனுமதிக்க வேண்டும்.

மேலும், இக்கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து, கால்நடை மருத்துவக் கல்வியை அனைவரும் சமமாகப் பெறுவதை உறுதி செய்ய வேண்டும். கிராமப்புற மற்றும் சமூக ரீதியாகப் பின்தங்கிய பின்னணியைக்கொண்ட மாணவர்களுக்கான வாய்ப்புகளைப் பாதுகாக்க வேண்டும். நமது கூட்டாட்சி அமைப்பிற்குள் மாநிலங்களின் தங்களுக்கான சட்டப்பூர்வ கொள்கை முடிவுகளை எடுக்கும் நிலையை உறுதி செய்ய வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் பன்னாட்டு உயர் கல்விக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி

தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் செயல்பட்டு வரும் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு மற்றும் இறுதி ஆண்டு பயிலும் மாணவ மாணவிகளுக்கானபன்னாட்டு உயர்கல்விக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜெயக்குமார் தலைமையேற்று நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். கல்லூரி நிர்வாக இயக்குனர் கனக பாண்டியன் முன்னிலை வகித்தார்.

இந்த பன்னாட்டு உயர் கல்வி விழிப்பு ணர்வு நிகழ்வினை Adiv Tutelage Language Serivice நிறுவனத்தின் இயக்குனர் டாக்டர் திவ்யா பன்னாட்டு கல்வி, வேலை வாய்ப்பு தேவைகள் பற்றி இறுதியாண்டு மாணவ மாணவிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த சிறப்பு நிகழ்வினை மின் மற்றும் மின்னணுவியல் துறை பேராசியர் தவச்செல்வம் ஒருங்கினணத்து நடத்தினார்.

இந்நிகழ்சியில் அனைத்து துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மூன்றாம் ஆண்டு மற்றும் இறுதி ஆண்டு பயிலும் அனைத்துறையினை சேர்ந்த மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.






பழனி அருகே குடிநீர் கேட்டு பொதுமக்கள் போராட்டம் திண்டுக்கல் மாவட்டம், பழனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சித்திரை குளம் ஊராட்சியின் போலம்மாவலசு வலசு பகுதியில் குடிநீர் விநியோகம் நடைபெறவில்லை எனக் கூறி, அப்பகுதி மக்கள் ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த pdo மற்றும் காவல்துறையினர், பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி நகர 7 வார்டு திமுக சார்பில் 7வார்டு நகர் மன்ற மூத்த உறுப்பினர் கே சுரேஷ் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் எட்டாவது நினைவு நாளில் கலைஞர் திரு உருவப்படத்திற்கு மழை தூவி மாலை அணிவித்து மலர்களை வைத்து அஞ்சலி செலுத்தினர் இதில் கழக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பொதுமக்கள் என பல கலந்து கொண்டனர்

# திருவண்ணாமலையில் ரூ.27.82 கோடியில் புதிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம்

## வேளாண் பட்ஜெட்டில் அமைச்சர் வினோத் அறிவிப்பு

திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளுக்கு ஒரே இடத்தில் அனைத்து வேளாண் சேவைகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் கிடைக்கும் வகையில், புதிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்கப்படும் என்று வேளாண்மைத் துறை அமைச்சர் வினோத் அறிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் 2026–27 ஆம் ஆண்டுக்கான வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்து பேசிய அமைச்சர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் அனைத்து திட்டங்கள், தொழில்நுட்ப ஆலோசனைகள், பயிற்சிகள் உள்ளிட்ட சேவைகளை விவசாயிகள் ஒரே வளாகத்தில் பெறும் நோக்கில், திருவண்ணாமலை உள்ளிட்ட மாநிலத்தின் எட்டு வட்டாரங்களில் புதிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் அமைக்கப்பட உள்ளதாக தெரிவித்தார்.

இந்த மையங்களில் 300 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கும் அமைக்கப்படும். இந்தத் திட்டத்திற்காக ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் இணைந்து மொத்தம் ரூ.27.82 கோடி நிதி ஒதுக்கியுள்ளன.

மேலும், நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், இயற்கை வேளாண்மை, மதிப்புக் கூட்டப்பட்ட வேளாண் பொருட்கள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த மாநிலம் முழுவதும் ரூ.3 கோடி செலவில் வேளாண் கண்காட்சிகள் (AGRI EXPO) நடத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேபோல், 22 திரவ உயிர் உர உற்பத்தி மையங்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.3.56 கோடி ஒதுக்கீடு செய்யப்படுவதுடன், விதை சுத்திகரிப்பு மற்றும் சேமிப்பு வசதிகளை



விரிவுபடுத்த சேலம், தூத்துக்குடி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்களும் அமைக்கப்படும் என்று அவர் அறிவித்தார்.

இந்த அறிவிப்புகள் திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண் சேவைகள் எளிதில் கிடைப்பதற்கும், நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கும்பெரும் உதவியாகஅமையும்என எதிர்பார்க்கப்படுகிறது.

# காஞ்சிபுரம் தேசிய மாணவர் படை சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 3 தமிழ் நாடு பட்டாலியன் காஞ்சிபுரம் தேசிய மாணவர் படை சார்பில் போதைப்பொருள் பயன்பாட்டை ஒழிக்கும் நோக்கில் விழிப்புணர்வு பேரணி சங்கரா கலை கல்லூரி மற்றும் ஆதி பொறியியல் கல்லூரியை சேர்ந்த தேசிய மாணவர் படை மாணவர்கள் சுமார் 500 பேர் உற்சாகமாக பங்கேற்று போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகள் குறித்து பொது போதைப்பொருள் பழக்கத்திலிருந்து விலகி ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்ற வேண்டும் என்பதையும் இந்நிகழ்வில் வலியுறுத்தினர். இப்பேரணியில் தேசிய மாணவர் படை







நடைபெற்றது. இப்பேரணியை 3 தமிழ்நாடு பட்டாலின் நிர்வாக அதிகாரி லெப்டினன்ட் கர்னல் ஆர் அனந்தகுமார் மற்றும் மது அமலாக்க பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு அருள்மணி ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதில் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, மக்களுடைய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பதாகைகள் மற்றும் முழக்கங்களுடன் பேரணியில் கலந்து கொண்டனர்.

போதைப் பொருள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு மிக முக்கியமானது என்பதையும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அலுவலர்கள் லெப்டினன்ட் சு.சக்திவேல், லெப்டினென்ட் நஜ்மா மற்றும் 3 தமிழ்நாடு பட்டாலியன் சுபேதார் மேஜர். லால் பகதூர் புன், சுபேதார் சிவசங்கர ரெட்டி, ராணுவ பயிற்றுநர்கள் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் மற்றும் காவலர்கள் கலந்து கொண்டு இப்பேரணியை சிறப்பித்தனர்.

# புள்ளிலைன் ஊராட்சி திமுக சார்பில் கலைஞர் கருணாநிதி படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் புள்ளிலைன் ஊராட்சி திமுக சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் டாக்டர் கலைஞர்8 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன் மலர் தூவி மரியாதை செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் ஊராட்சி செயலாளர்கள் பாயாசம்பாக்கம் வி.என். வெங்கடேசன், பாலாஜி கார்டன் இலக்கிய அணி துணை அமைப்பாளர் இ.பி. பத்மநாபன், கிளை துணைச் செயலாளர் எம். ஜெகன், ஜி.பாலாஜி, பொருளாளர்சி.அருள், ஜி.பெருமாள், குண்டுவெங்க



னிட்டு குப்பாமணி தோப்பு செயலாளர் ஜி. திணேஷ், புள்ளிலைன் செயலாளர் அ.டில்லி ஆகியோர் ஏற்பாட்டில் புள்ளிலைன் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தும் டாக்டர் கலைஞர் படத்திற்கு மாலை அணிவித்து செயலாளர் எம்டி.சி. மனோகரன், புழல் ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் எஸ். ஜி. சாக்ரடீஸ், புள்ளிலைன் ஊராட்சி முன்னாள்துணைத்தலைவர் கே.மாதவன், ஒன்றியமகளிர்அணிஅமைப்பாளர் ஏ.பிரேமலதா, டேசன்,ஜெ.பாண்டியன், இளைஞர் அணி நிர்வாகிகள் கே.விக்கி, ஜெ.முகுந்தன், டி.எஸ். லோகேஷ், டி.ஜி. கோகுல்ராஜ் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உறுப்பினர்கள், பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# ஊராட்சி மன்ற தலைவர் பதவி நீக்கத்திற்கு தடை

## மதுரை உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம் களப்பாகுளம் கிராமம். இங்கு ஊராட்சி மன்ற தலைவியாக சிவசங்கரி இருந்து வருகிறார். இவர் பதவி ஏற்ற சில மாதங்களிலேயே வார்டு உறுப்பினர்கள் சிலர் இவருக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்ததாக கூறப்படுகிறது. இரு தரப்பினருக்கு இடையே தொடர்ந்து ஏற்பட்ட மோதலின் காரணமாக காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு வழக்கும் பதிவு செய்யப்பட்டு உள்ளது. தொடர்ந்து அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பல்வேறு புகார்கள் எழுப்பப்பட்டு வந்ததாக



கூறப்படுகிறது.

இந்நிலையில் ஊராட்சியில் 33, 33,720 ரூபாய் அரசுக்கு நிதிஇழப்பு ஏற்படுத்தியதாக ஊராட்சி மன்ற தலைவர் சிவசங்கரியை பதவி நீக்கம் செய்து மாவட்ட ஆட்சியர் ரஜ்ஜீத் சிங் உத்தரவிட்டார். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனை எதிர்த்து ஊராட்சி மன்ற தலைவர் சிவசங்கரி மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இதில் மாவட்ட ஆட்சியரின் பதவி நீக்க உத்தரவிற்கு இடைக்கால தடை விதித்து மதுரை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த சம்பவம் மீண்டும் இப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



பழனி நில மோசடி வழக்கில் தேடப்பட்டு வந்த ஒட்டன்சத்திரத்தை சேர்ந்த ஜெயப்பிரகாஷ் என்பவர் திண்டுக்கல் சிபிசிஐடி அலுவலகத்தில் சரண்டர்.

### அமித் ஷா வருகை:

# திருவண்ணாமலையில் 2 நாட்கள் ட்ரோன்கள் பறக்க தடை

## ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தருவதையொட்டி, மாவட்ட த்தின் குறிப்பிட்ட பகுதிகளில் ஆகஸ்ட் 8 மற்றும் 9 ஆகிய இரண்டு நாட்களுக்கு ட்ரோன்கள், ரிமோட் கட்டுப்பாட்டு விமானங்கள் மற்றும் ஆளில்லா வான் வழி வாகனங்கள் (UAV) பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:



மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, ஆகஸ்ட் 8 மற்றும் 9ஆம் தேதிகளில் திருவண்ணாமலைக்கு வருகை தந்து, ஸ்ரீ ரமண மகரிஷி ஆசிரமம் மற்றும் அருணாச்சலேஸ்வரர் கோவிலில் தரிசனம் செய்து சிறப்பு பூஜையில் பங்கேற்க உள்ளார்.

இந்த வருகையையொட்டி, அமைச்சர் வருகை தரும் இடங்கள், ஹெலிபேடு, அவர் பயணிக்கும் முக்கிய வழித்தடங்கள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில்பாதுகாப்பு ஏற்பாடுகள்பலப்படுத்தப்பட்டுள்ளன.

பொது பாதுகாப்பு மற்றும் அமைச்சரின் முழுமையான பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், அங்கீகாரம் இன்றி ட்ரோன்கள், ரிமோட் கட்டுப்பாட்டு விமானங்கள் மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்கள் (UAV) இயக்கப்படுவது அல்லது பறக்க விடப்படுவது ஆகஸ்ட் 8 மற்றும் 9 ஆகிய தினங்களில் முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள், புகைப்படக் கலைஞர்கள், தனியார் நிறுவன ங்கள் மற்றும் ட்ரோன் இயக்குபவர்கள் இந்த உத்தரவை முழுமையாக கடைபிடித்து, மாவட்ட நிர்வாகத்திற்கும் காவல்துறைக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக் கொண்டுள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே கொழுமமகொண்டான்அருகேவீட்டைஉடைத்து நகைதிருட்டுவழக்கில்பழனிபொன்காளியம்மன் பகுதியை சேர்ந்தவரை கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர்

## திருமாவளவன் கைதை கண்டித்து... நடந்த சம்பவம் அரசு பேருந்தை தீ வைத்து எரித்த வழக்கில் 2 பேருக்கு சிறை தண்டனை



திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே 25 ஆண்டுகளுக்கு முன் அரசுப் பேருந்தை தீ வைத்து எரித்து டிரைவரை கொலை செய்ய முயன்ற வழக்கில் பழனி புதிய ஆயக்குடியைச் சேர்ந்த ஜெயசீலனுக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனையும், மானுரை சேர்ந்த ராஜேந்திரன் என்பவருக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் தலா ரூ முப்பதாயிரம் அபராதம் விதித்து பழனி கூடுதல் மாவட்ட நீதிமன்ற நீதிபதி மலர்விழி தீர்ப்பளித்தார்

# தீர்த்தக்கிரியம்பட்டு கோமதியம்மன் நகர் ஸ்ரீ நாகாத்தம்மன் ஸ்ரீ ஆதிவெங்கடேச பெருமாள் ஆலயத்தில் பால்குடம்

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி கோமதியம்மன் நகர் அருள்மிகு ஸ்ரீ நாகாத்தம்மன் ஸ்ரீ ஆதி வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் 19ஆம் ஆண்டு ஆடிமாத திருவிழாவை முன்னிட்டு பால் குடம் எடுக்கும் நிகழ்ச்சி ஆலய நிர்வாகிகள் தலைவர் விஜேந்திரன், செயலாளர் செந்தில்குமார், பொருளாளர் சென்னவராயபெருமாள், துணைத் தலைவர்கள் வெங்கடேசன், விநாயகம், துணைச்செயலாளர்கள் வெங்கடேசன், சுரேஷ், ஆலய ஆலோசகர்கள் சுப்பிரமணி, சங்கர், ஆலய கௌரவ நிர்வாகிகள்லோகநாதன், சரவணமூர்த்தி, சசிதரன் உட்பட ஆலய நிர்வாகிகள், கிராம பொதுமக்கள், ஆலய மகளிர் குழுவினர் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் அத்திவாக்கம் கோட்டூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ எல்லாத்தம்மன் ஆலயத்திலிருந்து மேளதாளத்துடன்சுமார்300க்கும் மேற்பட்ட தாய்மார்கள் தங்களது சிறசியில் பால் குடம் சுமந்தவாறு ஸ்ரீ நாகாத்தம்மன் ஸ்ரீ ஆதி வெங்கடேச பெருமாள் ஆலயத்திற்கு சென்றடைந்தனர். பின்னர் அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது.



இதனைத் தொடர்ந்து அம்மனுக்கு வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனைகாண்பிக்கப்பட்டது. இதில் ஆலய நிர்வாகிகள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஆலய சிறப்புநிர்வாகிகள்வெட்டும் பெருமாள், பாபு, பாபு (டிசிஎஸ்), செந்தில் முருகன், ராஜேஷ்பாபு, சுரேஷ், வைரமுடி, அசோக்குமார், கோபாலகிருஷ்ணன், கிஷோர்குமார், அன்புராஜ், பாபு, பாலா, ராமச்சந்திரன், பாலச்சந்தர், முருகானந்தம், மாணிக்கம், ராமராஜ், புஜ்ஜிபாபு, கோபி, கார்த்திக், பாபு, அரவிந்த், அனுராஜி, ரமேஷ், பாபு, மணிகண்டன், தனஞ்செழியன், ரவிக்குமார், பாண்டியராஜன், பொன்கருப்பசாமி, கோபிநாத், திலீப்குமார், சுரேஷ், பத்மநாபன் உள்ளிட்ட ஆலய நிர்வாகிகள், மகளிர் குழுவினர், கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு

# சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் 500 பேருக்கு அன்னதானம்





தமிழ்நாடு முன்னாள் முதல்வருர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். சுதர்சனம் ஆலோசனைப்படி சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளரும் சோழவரம் ஊராட்சி ஒன்றிய முன்னாள் துணைப் பெருந்தலைவருமான மீ.வே.கர்ணாகரன் தலைமையில் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதியின் திருஉருவ படத்திற்கு மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானத்தை வழங்கினர். இதில் சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக நிர்வாகிகள் ஏ.காசிம்முகம்மது, கே.எம். துரைவேல், மாவட்ட நிர்வாகிகள் சன் முனியாண்டி, நா.பரசுராமன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி நிர்வாகிகள் உறுப்பினர்கள், மகளிரணியினர் கலந்து கொண்டனர்.

### தென்காசி மாவட்டத்தில்

# கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரியத்தில் தங்களது விவரங்களை பதிவு செய்ய வேண்டும்

## மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், தகவல்

தென்காசி மாவட்டத்தில் உள்ள கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர்நலவாரிய த்தில் தங்களது விவரங்களை பதிவு செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சமூகநலம் (ம) மகளிர் உரிமைத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரியம் சென்னை05, கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், வறுமைகோட்டிற்குகீழ்



ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம் பெண்களில் உள்ளவர்கள், ஆதரவற்ற மகளிர் நலவாரியத்தில் TNWIDOWWELFAREBOARD.TN.GOV.INஎன்ற இணையதளமுகவரியில் பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்களான பாஸ்போர்ட் அளவு புகைப்படம், ஆதார் அட்டை, கணவனால் கைவிடப்பட்டதற்கான சான்று, விதவை சான்று, குடும்ப அட்டை, அலைபேசி எண் உள்ளிட்ட தங்களது விவரங்களைபதிவுசெய்துபயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.



## 'போதைக்கு நோ சொல்லுங்கள்' - செய்யாற்றில் 200 மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி

போதைப்பொருள் பயன்பாட்டை தடுக்கும் நோக்கில், செய்யாறு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் செய்யாறு ரோட்டரி சங்கம் இணைந்து போதைப் பொருள் ஒழிப்பு விழிப் புணர்வு பேரணி மற்றும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியை நடத்தினர். பேரணிக்கு முன்னதாக, மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே போதைப்பொருள் பயன் பாட்டால் ஏற்படும் உடல்நல, குடும்ப மற்றும் சமூக பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன், போதைப்பொருள்களைத் தவிர்த்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க உறுதிமொழியும் ஏ ற் க ப் ப ட் ட து . இதனைத் தொடர்ந்து, செய்யாறு பெரியார் சிலை அருகில் இருந்து தொடங்கிய விழிப்புணர்வு பேரணி, முக்கிய சாலைகள் மற்றும் மார்க்கெட் பகுதி வழியாக சென்று அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நிறைவடைந்தது. இந்த பேரணியில் சுமார் 200 மாணவ, மாணவிகள் உற்சாகமாக கலந்து கொண்டு, போதைப் பொருள் ஒழிப்பை வலியுறுத்தும் பதாகைகள் மற்றும் முழக்கங்களுடன் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர். விழிப்புணர்வு பேரணியை செய்யாறு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஆய்வாளர் கவிதா கொடியசைத்து தொடங்கி வைத்தார். உதவி ஆய்வாளர் சரவணன் முன்னிலை வகித்தார். செய்யாறு ரோட்டரி சங்கத் தலைவர் முனைவர் ராஜேஷ் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் ரோட்டரி சங்க நிர்வாகிகள் கோவே நந்தன், திருவாசகம் பாபு, அண்ணாதுரை, குமார், தரணிக்குமார், மோதிலால், சுதாகர், ரகுராமன் உள்ளிட்டோர் மற்றும் காவல் துறை அதிகாரிகள், பொதுமக்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டு போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்க அனைவரும் இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.



திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், தாமரைப்பாக்கம் ஊராட்சி பகுதியில் மாவட்ட நிர்வாகம் (ம) நீர்வளத்துறை சார்வில் கட்டாங்கல் கால்வாய் தூர்வாரும் பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கவிதா நேரில் ஆய்வு மேற்கொண்டு, பணிகளை பருவமழை காலத்திற்கு முன்பாக விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இணை இயக்குநர் (வேளாண்மை) செல்வராஜ், மாவட்ட ஆட்சிரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வேதவல்லி. உதவி இயக்குநர் (ஊராட்சிகள் (ம) தணிக்கை (கிழக்கு)) பஞ்சு, நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் செந்தில்குமார், உதவி பொறியாளர் உஷா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.





## கலைஞர் கருணாநிதி நினைவு நாளில் திமுகவினர் மவுன ஊர்வலம்

### சிலைக்கு மலரஞ்சலி, பொதுமக்களுக்கு அன்னதானம்

மறைந்த முன்னாள் முதலமைச்சரும், திமுக முன்னாள் தலைவருமான கலைஞர் மு. கருணாநிதியின் 8வது நினைவு நாளை முன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்டம் செய்யாற்றில் திமுக சார்பில் மவுன ஊர்வலம் மற்றும் அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது.

செய்யாறு அண்ணா சிலையில் இருந்து கலைஞர் கருணாநிதி சிலை வரை நடைபெற்ற மவுன ஊர்வலத்திற்கு முன்னாள் எம்.எல்.ஏ. ஓ. ஜோதி தலைமை தாங்கினார். ஆற்காடு சாலை வழியாக அரசு கலைக்கல்லூரி முன்பு வரை அமைதிப் பேரணியாக சென்ற திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், பின்னர் கருணாநிதி சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு, கலைஞர் கருணாநிதியின் சமூகப் பணிகள் மற்றும் அரசியல் பங்களிப்புகள் நினைவுகூரப்பட்டன.

நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. அன்பழகன், ஒன்றியச் செயலாளர்கள் சீனிவாசன், ஞானவேல், மாமண்டூர் ராஜி, கோபு உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், கட்சித் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தேசிய கைத்தறி தின விழா:

## ஆரணி பட்டு முதல் காஞ்சி காட்டன் வரை சிறப்பு கண்காட்சி

### ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்

12வது தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு, தி ரு வ ண் ண ா ம லை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனைமுகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் இன்று மாவட்டத்தில் சிறப்பு கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த கண்காட்சியில், தி ரு வ ண் ண ா ம லை மாவட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தயாரித்த புவிசார் சேவையைப் பாராட்டும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் நினைவுக் கேடயங்களை வழங்கி கவுரவித்தார்.

மேலும், நெசவாளர் முத்ரா திட்டத்தின் கீழ் ஐந்து நெசவாளர்களுக்கு மொத்தம் ரூ.2.50 லட்சம் மதிப்பிலான கடனு



(ஆகஸ்ட் 7) தொடங்கி வைத்து, விற்பனையை துவக்கி வைத்தார்.

1905ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7ஆம் தேதி தொடங்கப்பட்ட சுதேசி இயக்கத்தின் நினைவாகவும், கைத்தறித் தொழிலின் பாரம்பரியம், முக்கியத்துவம் மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அதன் பங்களிப்பை மக்களிடம் எடுத்துரைக்கும் நோக்கிலும் ஆண்டுதோறும் தேசிய கைத்தறி தினம் கொண்டாடப்படுகிறது.

அதன்படி, இந்த ஆண்டு 12வது தேசிய கைத்தறி தின விழாவை யொட்டி தி ரு வ ண் ண ா ம லை குறியீடு (GI) பெற்ற ஆரணி பட்டுச் சேலைகள், காஞ்சி காட்டன் சேலைகள், 60×60 டை & டை சேலைகள், லுங்கிகள், துண்டுகள் உள்ளிட்ட பல்வேறு கைத்தறி உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செ ய் ய ப் ப ட் ட ன . அனைத்து கைத்தறி பொருட்களுக்கும் அரசின் 20 சதவீத சிறப்பு தள்ளுபடி வழங்கப்பட்டது. விழாவை முன்னிட்டு, 60 வயதைக் கடந்தும் பல ஆண்டுகளாக கைத்தறி நெசவுத் தொழிலில் சிறப்பாக பணியாற்றி வரும் ஐந்து மூத்த நெசவாளர்களுக்கு அவர்களின் தவி வழங்கப்பட்டது. அ தே போ ல் , மூலப்பொருட்கள் விநியோகத் திட்டத்தின் கீழ் தேசிய கைத்தறி வளர்ச்சி கழகம் மூலம் மானிய விலையில் நூல் வாங்குவதற்கான நூல் பாஸ் புத்தகங்களையும் ஐந்து நெசவாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை சரக உதவி இயக்குநர் செ. மாதவன், மாவட்ட நிர்வாக அலுவலர்கள், பல்வேறு துறை அதிகாரிகள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க நிர்வாகிகள், பணியாளர்கள் மற்றும் நெசவாளர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## கோணலூரில் 21வது ஆண்டு ஆடிக் கிருத்திகை திருவிழா கோலாகலம்

### ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று நேர்த்திக்கடன் நிறைவேற்றினர்

தி ரு வ ண் ண ா ம லை அடுத்த கோணலூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத சிவ



சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 21வது ஆண்டு ஆடிக் கிருத்திகை திருவிழா பக்தி பரவசத்துடன் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

வி ழ ா வை யொ ட் டி அதிகாலை முதலே சுவாமிக்கு பால், தயிர், தேன், பன்னீர், சந்தனம் உள்ளிட்ட பல்வேறு திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து வள்ளி–தெய்வானை சமேத முருகப் பெருமானுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப் பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, சக்தி கரகம் ஊர்வலமாக கிராம வீதிகள் வழியாக எடுத்து வரப்பட்டு கோயிலை வந்தடைந்தது. விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு 108 அலகு குத்துதல், பால் காவடி, பன்னீர்காவடி, மயில்காவடி, அக்னிச்சட்டி எடுத்தல் உள்ளிட்ட பல்வேறு நே ர் த் தி க் க ட ன் க ளை நிறைவேற்றி முருகப் பெருமானை வழிபட்டனர்.

நாள்முழுவதும் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து அருள் பெற்றனர். வி ழ ா வை யொ ா ட் டி அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இரவு நடைபெற்ற சிறப்பு நி க ழ் ச் சி யி ல் அருள்மிகு ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத சிவசுப்பிரமணிய சுவாமி சிறப்பு அ ல ங் க ா ர த் தி ல் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். திருவி ழ ா வி ல் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு பக்தி ப ர வ ச த் து ட ன் சுவாமி தரிசனம் செய்தனர்.

விழா ஏற்பாடுகளை தர்மகர்த்தா ராஜகண்ணு த லை மை யி ல் சுப்பிரமணி, குமார், கதிர்வேல், ஏழுமலை, முருகன், சதீஷ், சரத்குமார், சண்முகம், அன்பரசன், சந்தோஷ், பவுன்குமார், ரமேஷ், மணிகண்டன் உள்ளிட்ட திருவிழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.





## செங்குன்றம் புதிய பேருந்து நிலையத்தை மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார்

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி ஜி.என்.டி. சாலையில் அமைந்திருந்த பழைய பேருந்து நிலையத்தை இடித்து விட்டு சுமார் 3 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டும் பணி கடந்த திமுக ஆட்சியில் தொடங்கப்பட்டது.

இப்பணி முடியும் தருவாயில் இருப்பதால் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ச.கவிதா நேரில் வருகை தந்து ஆய்வு செய்தார்.

விரைவில் திறக்கப்படவுள்ள பேருந்து நிலையம் பொதுமக்கள் பயன்படுத்தும் விதத்தில் உள்ளதா, பேருந்துகள் உள்ளே வந்து செல்வதற்கான வசதிகள், நேரக்கட்டுப்பாட்டு அறைகள், ஓட்டுநர், நடத்துநர்கள் ஓய்வு நேரத்தில் பயன்படுத்தும் அறைகள் மற்றும் வணிகத்திற்காக கட்டப்பட்டுள்ள கடைகளையும் ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். புதிதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு முன்பு வைக்கப்பட்டுள்ள பழ, பூக்கடைகளை உடனடியாக அகற்ற வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டதைத் தொடர்ந்து செங்குன்றம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த கடைகளையும், அதன் பொருள்களையும் காவல் துறையினர் ஒத்துழைப்புடன் உடனடியாக அகற்றினார்.

ஆய்வின் போது செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி செயல் அலுவலர் பாஸ்கர், பொன்னேரி வட்டாட்சியர் ஜெய்கர்பிரபு உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கோட்டூர் ஸ்ரீ எல்லாத்தம்மன் ஆலய ஆடிதிருவிழாவை முன்னிட்டு பால்குடம்

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீ ர் த் த க் கி ரி ய ம் ப ட் டு ஊராட்சி அத்திவாக்கம் கோட்டூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ எல்லாத்தம்மன் ஆலயத்தில் ஆடிமாத திருவிழாவை முன்னிட்டு பால் குடம் எடுத்தல் நிகழ்ச்சி ஆலய நிர்வாக குழுவினர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்திலிருந்து மேளதாளத்துடன் சுமார் 300க்கும் மேற்பட்ட தாய்மார்கள் தங்களது சிறசியில் பால்குடம் சுமந்த வாறு ஸ்ரீ எல்லாத்தம்மன் ஆலயத்திற்கு சென்றடைந் தனர். பின்னர் அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து தீபாராதனை காண்பித்தனர்.



இதனைத் தொடர்ந்து அம்மனுக்கு வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது.

இதில் ஆலய அனைத்து நிலை பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



திண்டுக்கல் மாவட்டம் பழனி வீட்டில் தனியாக வசித்து வந்த மூதாட்டி ராமுத்தாயின் கழுத்தை நெறித்து கொலை மூதாட்டி அணிந்திருந்த ஏழு சவரன் தங்க நகைகள் கொள்ளையடித்து சென்ற மர்ம நபர்களை போலீசார் விசாரணை

# கூடலூர் அம்மா உணவகத்தில் தரம் குறைந்த உணவு

## மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை

தேனி மாவட்டம் கூடலூர் நகராட்சி பகுதியில் ஏழை, எளிய மக்களின் பசி போக்கும் வகையில் அம்மா உணவகம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது காலையில் இட்லி, பொங்கல், சாம்பாரும், மதியம் சாம்பார் சாதம், எலுமிச்சை சாதம், தயிர் சாதமும், இரவில் சப்பாத்தியும் மக்களுக்கு மலிவு விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. முன்பு சுவையாகவும் தரமாகவும் வழங்கப்பட்டு வந்த இந்த உணவு, தற்போது நகராட்சி நிர்வாகத்தின் மூலம் மளிகைப் பொருட்களும் காய்கறிகளும் வழங்க தொடங்கிய பிறகு அதன் தரம் மிகவும் குறைந்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பொதுவாக, நகராட்சி பகுதிகளில் உள்ள அம்மா உணவகங்களில் தினமும் காலையில் சுகாதார ஆய்வாளர்கள் நேரில் சென்று உணவின் தரம் மற்றும் அளவை ஆய்வு செய்வது வழக்கம். ஆனால், கூடலூர் நகர் பகுதியில் உள்ள அம்மா உணவகத்தில் அத்தகைய ஆய்வுகள் எதுவும் நடப்பதாக தெரியவில்லை என பொது மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். இங்கு வழங்கப்படும் சாம்பாரில் எந்தவித சுவையும் இருப்பதில்லை என்றும், அதுவும் மிகவும் குறைந்த அளவே வழங்கப்படுவதாகவும் உணவருந்த வரும் மக்கள் புகார் கூறுகின்றனர். எனவே, உணவின் தரத்தை மீட்டெடு க்கவும், மக்களின் நலனை பாதுகாக்கவும் உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகளும், சுகாதார ஆய்வாளரும், நகராட்சி ஆணையரும் உடனடியாக இந்த உணவகத்தில் நேரில் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும். ஆய்வு செய்து முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க தேவையான உத்தரவுகளை மாவட்ட ஆட்சியர் பிறப்பிக்க வேண்டும் என கூடலூர் பகுதி பொது மக்களும் சமூக ஆர்வலர்களும் மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்து ள்ளனர்.

# கூட்டுறவு தேர்தல் வாக்காளர் பட்டியலில் இடம்பெற ஆக.17க்குள் ஆதார் நகல் கட்டாயம்

## திருவண்ணாமலை இணைப்பதிவாளர் அறிவிப்பு

கூட்டுறவு சங்கங்களின் வரவிருக்கும் நிர்வாகக் குழுத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறவிரும்பும்உறுப்பினர்கள்,தங்களது ஆதார் அட்டையின் நகலை வரும் ஆகஸ்ட் 17ஆம் தேதி மாலை 5.45 மணிக்குள் கட்டாயம் சம்பந்தப்பட்ட சங்கத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று திருவண்ணாமலை மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் எஸ். பார்த்திபன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகள் மற்றும் அரசாணைகளின்படி, உறுப்பினர்களின் நுழைவுப் புத்தகத்தில் அவர்களது பெயர் விவரங்களுடன் ஆதார் எண்ணும் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும். இதுவரை ஆதார் எண்ணை சங்கத்தில்சமர்ப்பிக்காதஉறுப்பினர்களுக்கு,இயற்கை நீதி கோட்பாட்டின் அடிப்படையில் இறுதி வாய்ப்பாக ஆதார் நகலை சமர்ப்பிக்க அவகாசம் வழங்கப்பட்டு ள்ளது. எனவே, வரவிருக்கும் கூட்டுறவு சங்க நிர்வாகக் குழுத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற விரும்பும் உறுப்பினர்கள், தங்களது ஆதார் நகலை சம்பந்தப்பட்ட சங்க அலுவலகத்தில்அலுவலகநேரத்தில்நேரில்வழங்கலாம். மேலும், பதிவுத் தபால் மூலமாகவும் அனுப்பி வைக்கலாம். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஆதார் நகலை சமர்ப்பிக்கத் தவறினால், தமிழ்நாடு கூட்டுறவு சங்கத் தேர்தல் விதி 52(7)(E)ன்படி, வரவிருக்கும் நிர்வாகக் குழுத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையையும், தேர்தலில் போட்டியிடும் உரிமையையும் உறுப்பினர்கள் இழக்க நேரிடும் என இணைப்பதிவாளர் எஸ். பார்த்திபன் எச்சரித்துள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி புது தாராபுரம் ரோடு கவுண்டர் இட்டேரி ரோட்டில் பல இடங்களில் சாக்கடைகளில் பிளாஸ்டிக் கழிவுகள் அடைத்து நிறைந்துள்ளன இத்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே நடவடிக்கை எடுத்து சாக்கடைகளை சுத்தம் செய்து கழிவுநீர் செல்ல வழிவகை செய்ய வேண்டுமென பகுதி மக்கள் மற்றும் ஓட்டுநர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்






# காஞ்சிபுரம் தேசிய மாணவர் படை சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 3 தமிழ்நாடு பட்டாலியன் காஞ்சிபுரம் தேசிய மாணவர் படை சார்பில் போதைப்பொருள் பயன்பாட்டை ஒழிக்கும் நோக்கில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இப்பேரணியை 3 தமிழ்நாடு பட்டாலின் நிர்வாக அதிகாரி லெப்டினன்ட் கர்னல் ஆர் அனந்தகுமார் மற்றும் மது அமலாக்க பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு அருள்மணி ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதில் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, சங்கரா கலை கல்லூரி மற்றும் ஆதி பொறியியல் கல்லூரியை சேர்ந்த தேசிய மாணவர் படை மாணவர்கள் சுமார் 500 பேர் உற்சாகமாக பங்கேற்று போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகள் குறித்து பொதுமக்களுடைய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பதாகைகள் மற்றும் முழக்கங்களுடன் பேரணியில் கலந்து கொண்டனர்.

போதைப் பொருள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு மிக முக்கியமானது என்பதையும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து விலகி ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்ற வேண்டும் என்பதையும் இந்நிகழ்வில் வலியுறுத்தினர்.

இப்பேரணியில்தேசிய மாணவர் படை அலுவலர்கள் லெப்டினன்ட் சு. சக்திவேல், லெப்டினென்ட் நஜ்மா மற்றும் 3 தமிழ்நாடு பட்டாலியன் சுபேதார் மேஜர். லால் பகதூர்புன், சுபேதார் சிவ சங்கர ரெட்டி, ராணுவ பயிற்றுநர்கள் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் மற்றும் காவலர்கள் கலந்து கொண்டு இப்பேரணியை சிறப்பித்தனர்.

# செய்யாறு அருகே வெம்பாக்கம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் கலைஞர் நினைவு தினம் அனுசரிப்பு

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்செய்யாறு சட்டமன்ற தொகுதி வெம்பாக்கம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் தலைமையில் திருவண்ணாமலை முன்னாள் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் பார்வதி சீனிவாசன் முன்னிலையில் திமுசம், பெருமாள், திமுக பிரமுகர்கள் சங்கர் முனுசாமி, ஆதி, குமார், செல்வராஜ், ஜெய்குமார், சேகர், முனியன், ஆறுமு



வெம்பாக்கம், அப்துல்லாபுரம், அழிவிடை தாங்கி, தூசி உள்ளிட்ட கிராம பகுதிகளில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் 8வது ஆண்டு நினைவு நாள் ஒட்டி வெம்பாக்கம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் ஜே.சி.கே.சீனிவாசன் கவினர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை தலைவர் சிட்டி பாபு, மாவட்ட பிரதிநிதிகள் சிவப்பி ரகாகம், பூபாலன், ஆறுமுகம், சந்திரன், அருள் தேவி செந்தில்குமார், கோகுல், பார்த்திபன், செல்வகுமார், தயாளன், ஆறுமுகம், கோபால், ராஜா, பன்னீர்செல்வம், ஆனந்தன், பசீர், பாபு, பாலாஜி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கலைஞரின் 8ஆம் ஆண்டு நினைவு நாள்: செய்யாற்றில் திமுகவினர் மரியாதை

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதியின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நகர திமுக சார்பில் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நகர திமுக செயலாளர் வழக்கறிஞர் கே. விஸ்வநாதன் ஏற்பாட்டில் அண்ணா சிலை அருகே நடைபெற்ற நிகழ்ச்சியில், கலைஞர் கருணாநிதியின் திருவுருவப் படத்திற்கு முன்னாள் சட்டமன்ற



உறுப்பினர் வ. அன்பழகன், திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர். வேல்முருகன், மாவட்ட துணைச் செயலாளர் க. லோகநாதன், நகர திமுக செயலாளர் கே. விஸ்வநாதன் மற்றும் நகர்மன்றத் தலைவர் ஆ. மோகனவேல் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து, கலைஞர் கருணாநிதியின் அரசியல் பயணம், சமூக நீதி, தமிழ் மொழி வளர்ச்சி மற்றும் மக்களுக்கான நலத்திட்டப் பணிகள் குறித்து நினைவுகூரப்பட்டது. அவரது கொள்கைகளையும் மக்கள் நலப் பணிகளையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என நிகழ்ச்சியில் வலியுறுத்தப்பட்டது. இந்நிகழ்வில் திமுக நிர்வாகிகள் மற்றும் கட்சியினர் கலைஞர் பாஸ்கர், ஜி. துரை, ஆக்கூர் முருகேசன், ஆர். சதிஷ், கே. ராஜி, மு. கருணாநிதி, டி. கருணாநிதி, பா. பாரதி, சதிஷ், மணி, கன்னியம்நகர் சுப்புரா, ஐ.டி.ஸ்ரீகாந்த்,பி.எல்.ஏ.2 ரமேஷ் உள்ளிட்ட பலர் பங்கேற்று கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினர்.

## தேசபக்தி நாளிதழ் எதிரொலி:

# கே.ஜி.எஃப் தாலுகா அலுவலகம் அருகே டிரான்ஸ்பார்மரை சூழ்ந்திருந்த புதர்கள்

## உடனடியாக அகற்றிய அதிகாரிகள் – பொதுமக்கள் நன்றி

கே.ஜி.எஃப் தாலுகா அலுவலகம் அருகே, சஞ்சய் காந்தி நகர் பகுதியில் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் மின்சார டிரான்ஸ்பார்மரைச்சுற்றி வளர்ந்திருந்த செடிகள் மற்றும் புதர்கள் தொடர்பாக வெளியான செய்திக்கு தற்போது உடனடி எதிரொலி கிடைத்துள்ளது.

மின்சார டிரான்ஸ்பார்மரைச்சுற்றிலும் நீண்ட நாட்களாக செடிகள் மற்றும் புதர்கள் அடர்ந்து வளர்ந்திருந்ததால், அந்த பகுதி முறையாக பராமரிக்கப்படாத நிலையில் காணப்பட்டது.

டிரான்ஸ்பார்மரைச் சுற்றி புதர்கள் அதிகமாக வளர்ந்திருந்ததால், மின்சார உபகரணங்களை ஆய்வு செய்வதற்கும், அவசர காலங்களில் மின் வாரிய பணியாளர்கள் அந்த இடத்தை அணுகுவதற்கும் சிரமம் ஏற்படும் நிலை இருந்தது.

மேலும், பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதியில் இதுபோன்ற மின்சார உபகரணங்களைச் சுற்றி புதர்கள் வளர்ந்து கிடப்பது பாதுகாப்பு குறித்த அச்சத்தையும் ஏற்படுத்தியது.

இதுகுறித்து அப்பகுதி மக்களின்கவலைகள் மற்றும் கோரிக்கைகள் தேசபக்தி நாளிதழ் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன.

பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, டிரான்ஸ்பார் மரைச் சுற்றி வளர்ந்திருந்த செடிகள் மற்றும் புதர்கள் குறித்து தேசபக்தி நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது.

தேசபக்தி நாளிதழ் செய்தி எதிரொலி! செய்தி வெளியானதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின்கவனத்திற்கு இந்த விவகாரம் உடனடியாக சென்றது.

பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனை என்பதால், அதிகாரிகள் தாமதிக்காமல் நடவடிக்கை மேற்கொண்டனர்.

சம்பந்தப்பட்ட பணியாளர்கள் அந்தப் பகுதிக்கு சென்று, டிரான்ஸ்பார்மரைச்சுற்றி அடர்ந்து வளர்ந்திருந்த செடிகள் மற்றும் புதர்களை அகற்றினர்.

இதனால், டிரான்ஸ்பார்மரைச்சுற்றியிருந்த பகுதி தற்போது சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் காணப்படுகிறது.

செய்தி வெளியான உடனேயே அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டிருப்பது அப்பகுதி பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

“பிரச்சனை செய்தியாக வெளியானது... அதிகாரிகளின்கவனத்திற்கு சென்றது... உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது...”

என்ற வகையில், தேசபக்தி நாளிதழின் செய்தி எதிரொலி தற்போது பொதுமக்களின் பிரச்சனைக்கு தீர்வாக அமைந்துள்ளது.





மின்சார டிரா ன்ஸ்பார்மர் என்பது ஒரு பகுதியில் மின்சார விநியோகத்தை சீராக வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கும் உபகரணம்.

அத்தகைய டிரான்ஸ்பார்மர்களைச் சுற்றி தேவையற்ற செடிகள், கொடிகள் மற்றும் புதர்கள் வளராமல் தொடர்ந்து பராமரிப்பது அவசியம்.

குறிப்பாக மழைக்காலங்களில் செடிகள் வேகமாக வளரக்கூடிய சூழல் இருப்பதால், மின்சார உபகரணங்கள் அமைந்துள்ள பகுதிகளில் அதிகாரிகள் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

கே.ஜி.எஃப் தாலுகா அலுவலகம் அருகே ஏற்பட்டிருந்த இந்த பிரச்சனை தற்போது சரிசெய்யப்பட்டுள்ள நிலையில், அப்பகுதி மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

மேலும், தங்களது கோரிக்கையை செய்தியாக வெளியிட்டு அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்ற தேசபக்தி நாளிதழுக்கும், செய்தியை பார்த்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களின் நன்றி

“பிரச்சனை இருந்த போது அதிகாரிகளிடம் தெரிவித்தோம். செய்தியாக வெளியானதும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. டிரான்ஸ்பார்மரைச்சுற்றியிருந்த புதர்கள் தற்போது அகற்றப்பட்டுள்ளன. இதனால் எங்களுக்கு நிம்மதி ஏற்பட்டுள்ளது” என அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

மக்களின் அடிப்படை பிரச்சனைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதிலும், சம்பந்தப்பட்ட துறைகளின்கவனத்திற்கு கொண்டு செல்வதிலும் ஊடகங்களின் பங்கு முக்கியமானதாக உள்ளது.

அதே நேரத்தில், பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பான செய்திகளை கவனத்தில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளின் செயல்பாடும் பாராட்டுக்குரியது.

இந்த சம்பவம், பொதுமக்கள் தங்களது பகுதியில் ஏற்படும் பிரச்சனைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும் என்பதையும், அந்த பிரச்சனைகளுக்கு அதிகாரிகள் விரைந்து தீர்வு காண வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

தொடர்ந்து கண்காணிப்பு அவசியம்

டிரான்ஸ்பார்மரைச் சுற்றியிருந்த புதர்கள் அகற்றப்பட்டுள்ள நிலையில், இனிவரும் நாட்களிலும் அந்த பகுதியை தொடர்ந்து பராமரிக்க வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கே.ஜி.எஃப் தாலுகா அலுவலகம், சஞ்சய் காந்தி நகர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள மின்சார டிரான்ஸ்பார்மர்கள், மின்கம்பிகள் மற்றும் மின் உபகரணங்கள் அமைந்துள்ள பகுதிகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும்.

சிறியதாகத் தோன்றும் ஒரு பிரச்சனை கூட பின்னர் பெரிய பாதுகாப்பு சிக்கலாக மாறாமல் இருப்பதற்கு முன்கூட்டியே நடவடிக்கை எடுப்பது மிகவும் அவசியம்.

அந்த வகையில், தேசபக்தி நாளிதழில் வெளியான செய்தி உடனடியாக எதிரொலித்து, டிரான்ஸ்பார்மரைச்சுற்றியிருந்த புதர்கள் அகற்றப்பட்டிருப்பது மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மக்களின் பிரச்சனை...

தேசபக்தி நாளிதழில் செய்தி...

செய்திக்கு உடனடி எதிரொலி...

அதிகாரிகளின் துரித நடவடிக்கை...

டிரான்ஸ்பார்மரைச் சுற்றியிருந்த புதர்கள் அகற்றம்...

பொதுமக்களின் நிம்மதி... அதிகாரிகளுக்கு நன்றி!

மக்களின் குரலை வெளிப்படுத்தும் தேசபக்தி நாளிதழின் செய்திக்கு கிடைத்த வெற்றிகரமான எதிரொலியாக, கே.ஜி.எஃப் தாலுகா அலுவலகம் அருகே இருந்த இந்த பிரச்சனை தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக செய்தி தொடர்ந்து பயணிக்கும்...

தேசபக்தி நாளிதழ் — மக்களின் குரல்... மக்கள் பிரச்சனையின் எதிரொலி!

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA